# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.292/2025 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சையது அபுதாகிர் | த–பெ | சிராஜுதீன் |
| ஊர்: | : | மதுரை | | |
| வயது: | : | 32/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் மருத்துவர், துணை பேராசிரியர் | மாவட்டம் | மதுரை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.05.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மதுரையில் வசித்து தனியார் மருத்துவனையில் துணை பேராசிரியராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின் மருத்துவ அதிகாரி அமரேஸ்வர ரெட்டி என்பவர் வழக்கு சமயத்தில் வேலம்மாள் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மருத்துவராக பணி செய்து வந்துள்ளார். தற்சமயம் அவர் வேறு மாநிலத்திற்கு மாறுதலாகி போயிவிட்ட காரணத்தால் அரசு தரப்பில் காலதாமதத்தை தவிற்கும் பொருட்டு கேட்டுக்கொண்டதற்கினங்க மனு செய்து எதிரி தரப்பில் ஆட்சேபனையின்றி அவரது கையொப்பம் தெரிந்த நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

மேற்படி மருத்துவர் 26.10.2018 அன்று பணியில் இருந்த போது முகமது அப்பாஸ் என்பவர் 25.10.2018 அன்று இரவு 8.30 மணியளவில் காரைக்குடி கல்லூரி சாலையில் வாகன விபத்து ஏற்பட்டு தலைக்காயம் ஏற்பட்டு காரைக்குடி காவேரி மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டவரை அனுமதித்து சிகிச்சை வழங்கிய போது அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தது.

1. தலைக்காயம்
2. மூளைப்பகுதியில் ஏற்பட்ட ரத்த கசிவு
3. பெருமூளை வீக்கம்

மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காய வகையை சேர்ந்தது அவர் சான்று அளித்துள்ளார். மேற்படி **காய சான்று அ.சா.ஆ.2**.

**அரசு தரப்பில் விசாரணை**

நபர் ஒருவருக்கு சாலை விபத்து நேர்ந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்புள்ளது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சொல்லியுள்ள 3 காயங்களும், காயத்தின் தன்மையும் காவலர்கள் அளித்த

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். முதல் உதவி செய்தவர்கள் அறிக்கை எதுவும் எங்களது மருத்துவமனைக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று அவரே நிலை தடுமாறி கீழே சாலையில் விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். மருத்துவர் அமரேஸ்வர ரெட்டி என்பவரின் முகவரி தற்போது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.08 18:01:25 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.